மாலை முரசு


பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 08 திங்கட்கிழமை 25.09.2023 அதிர்வு 56

## கடற்கரையிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் உள்ள கடற்கரையில் பிறந்து ஒரு நாளேயான ஆண் சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04

## சஜித்துடன் ஐ.எம்.எவ். பிரதிநிதிகள் பேச்சு



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறுதிக் கலந்துரையாடலின் நிமிர்த்தம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பொருளாதார, சமூக, அரசியல் 04

# பொது நினைவுச் சின்னம்: தமிழினம் அனுமதியாது!



### பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் உறுதி

“ஜனாதிபதி செயலகம் போரில் இறந்த இராணுவத்தினர், விடுதலைப் போராளிகள், பொதுமக்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் பொதுவான நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதாக முடிவெடுத்து அதனை விரைவில் நிறுவுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. இது தொடர்பாக அரச தரப்பால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடலொன்றை நிகழ்த்தியுள்ளது. தமிழர் தாயகத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இக் கலந்துரையாடல் தொடர்ந்து இடம் பெறவுள்ளது. 04



### 30 கோடி ரூபா பெறுமதியான

## கொக்கெய்னுடன் ஒருவர் சிக்கினார்

முப்பது கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கென்யப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதியோப்பியாவில் இருந்து வரும்போதே 26 வயதான கென்யப் பிரஜை சுமார் 4 கிலோ நிறையுடைய கொக்கெய்ன் போதைப்பொருளை எடுத்துவந்துள்ளார்.

கென்யப் பிரஜை எதியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து 04

## சிங்களப் பாடசாலைகளை தமிழ்ப் பாடசாலைகளுடன் இணைக்க இடமளியேன்!



### மனோ எம்.பி. திட்டவட்டம்

“கொழும்பு கல்வி வலயத்தில் மாணவர் தொகை குறைந்த சிங்களப் பாடசாலைகளை அருகாமை தமிழ்ப் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சியை, தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் சிலர் முன்னெடுக்க முயல்கிறார்கள். எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புக்களையும் பிடுங்க முயலும் இத்தகைய 04

## இலங்கையர் இருவர் தமிழகத்தில் தஞ்சம்

- என்.புவியரசன் -



இலங்கையில் இருந்து இரண்டு பேர் இன்று அதிகாலை தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த இருவரை ஏற்றிச் சென்ற படகு தமிழகம் – தனுஸ்கோடி கரையில் அவர்களை இறக்கி விட்டுள்ளது. 58 மற்றும் 60 வயதுடையவர்களே இவ்வாறு 04

# பொலிஸாரைத் தாக்கிய குற்றச்சாட்டு பாடசாலை மாணவர்கள் 5 பேர் கைது!

கொழும்பின் புறநகர் பகுதியான கல்கிஸ்ஸ பகுதியில் 2 பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் பாடசாலை மாணவர்கள் உட்பட 6 பேரை கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் பாறைகள் கூடிய இடங்களில் குடிபோதையில் சிலர் பாதுகாப்பின்றி நீராடுகின்றனர் என்று கல்கிஸ்ஸ கடலோர பொலிஸ் பிரிவு அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சோதனையின் போது, நீராடுவதற்கு தகுதியற்ற வகையில் பாதுகாப்பற்ற இடத்தில் 6 பேர் அவதானிக்கப்பட்டனர்.

அந்த இடத்தில் குளிப்பது பாதுகாப்பற்றது என்று கூறியதையடுத்து, அவர்களை அங்கிருந்து செல்லுமாறு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆபாசமான வார்த்தைகளில் திட்டியதுடன் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

நிலைமையை கட்டுப்படுத்த மேலும் சில அதிகாரிகள் சென்ற போது, அவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கியுள்ளனர்.

இந்த நிலையில் தாக்குதலில் ஈடுபட்ட சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்தனர் என்றும் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அரசுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விடுத்துள்ளார்

சமூக ஊடக அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கும் அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், மகளிர் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களுடன் நேற்று (24) நடந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்–

சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒடுக்குமுறை சட்டத்தை அரசு சமர்ப்பிக்க தயாராகி வருகிறது.

நிகழ் நிலைக் காப்பு என்ற பெயரை முன்னிலைப்படுத்திக் கொண்டாலும் அதில் எந்தப் பாதுகாப்பும் இல்லை, அதில் அடக்குமுறைகளே இருக்கின்றன.

பொதுமக்களின் குரல்களையும், எதிர்க்கட்சியை அடக்குவதுமே இதன் நோக்கம்.

இதற்கென ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது. அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதும் நீக்கப்படுவதும் ஜனாதிபதியால்தான்.

தான் கூறும்படி செயல்படாவிட்டால், அந்த உறுப்பினர்கள் நீக்கப்படலாம். தமக்கு நட்பாக செயற்படும் அடியாள்களை நியமித்து தனது பதவிக்கும், தனக்கும், தனக்கு நெருக்கமானவர்களுக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பஸ்ஸில் உயிரிழந்துள்ள பெண் அடையாளம் கோரும் பொலிஸ்!

நீர்கொழும்பில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. அவரது அடையாளத்தை உறுதி செய்வதற்கு பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

நீர்கொழும்பு பேருந்து நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் பயணத்தை ஆரம்பித்து பேருந்து மஹரகம கண் வைத்தியசாலைக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு இருந்த போது மினுவாங்கொட பிரதேசத்தில் வைத்து குறித்த பெண் பேருந்தில் ஏறியுள்ளார்.

பயணிகள் அனைவரும் வைத்தியசாலைக்கு அருகே இறங்கியுள்ளனர். ஆனால் இந்தப் பெண் அங்குள்ள இருக்கையில் தூங்கி கொண்டிருந்துள்ளார்.

பேருந்தின் நடத்துனர் பெண்ணை அணுகி அவரை எழுப்பியுள்ளார். எனினும் அவர் பதிலளிக்காததால், இது குறித்துச் சாரதியிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில், அந்தப் பெண்ணை பேருந்தில் மஹரகம பொலிஸாரிடம் கொண்டு வந்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சென்று சோதனையிட்ட போது, பெண் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணுடன் பாதுகாவலர் எவரும் இல்லாததாலும், அவரது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் எதுவும் அவரிடம் இல்லாததாலும் பொலிஸார் பொது மக்களது உதவியை நாடியுள்ளனர்.



# நாணய நிதியத்தினரை ரணில் நாளை சந்திப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நாளை (26) நடைபெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மீளாய்வு கலந்துரையாடல்கள் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன.

இந்த மீளாய்வு கலந்துரையாடல் தொடரில், இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாம் தவணையை பாதுகாப்பது மற்றும் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மீதான நம்பிக்கையை அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, சுமார் 2 வாரங்களாக இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் தொடரின் இறுதிக் கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையை பெற்றுக் கொள்வது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா, செட்டிக்குளத்தில் சிறுதானியம் அமோக விளைச்சல்

வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாவற்குளம் யுனிட் 4, 5, 6 பகுதியில் மூன்றாவது போகமாக விதைக்கப்பட்டு அறுவடைக்கு தயாராகவிருக்கும் விளைநிலங்களை மாவட்ட செயலாளர் அண்மையில் பார்வையிட்டார்.

சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில் 45 விவசாயிகள் இணைந்து உழுந்து, கௌப்பி, பயறு போன்ற சிறுதானியங்களை பயிரிட்டு அமோக விளைச்சலைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போகத்துக்குத் தேவையான நீரைத் தாம் செட்டிக்குளம் பெரிய நீர்ப்பாசன திணைக்கள அனுசரணையின் கீழ் பெற்றுக் கொண்டனர் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தகுந்த காலத்தில் கிடைத்த அறிவுரை மற்றும் சரியான கால இடைவெளியில் கிடைக்கப்பெற்ற அளவான நீர் போன்றன இரட்டிப்பு விளைச்சலை தாம் பெற்றுக் கொள்ள காரணம் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதீத அக்கறைதான் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட செயலாளர் சரத்சந்ரவுடன் நீர்ப்பாசனத் திணைக்கள பணிப்பாளர், பொறியியலாளர், திட்ட முகாமையாளர் மற்றும் விவசாயிகள் விளைநிலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.




## நாவற்குழிப் பிரதேசத்தில் கர்ப்பிணிகளுக்கு உதவி

(த.சுபேசன்)

தென்மராட்சி – நாவற்குழிப் பிரதேசத்தில் உள்ள தேவைப்பாடுடைய கர்ப்பிணிப் பெண்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன் ஞாபகார்த்தமாக சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தால் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.





## மிருசுவில் வடக்கில் வெடிபொருள் மீட்பு!

(த.சுபேசன்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிருசுவில் வடக்கு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து வெடி பொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

அந்தக் காணியை ஜே.சி.பி வாகனத்தால் துப்புரவு செய்த போது பரல் ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன்போது கிளைமோர், மிதிவெடி மற்றும் மோட்டார் ஷெல் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசேட அதிரடிப் படையினர் ஊடாக வெடிபொருள்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

### கடற்கரையிலிருந்து...

நேற்று மாலை கடற்கரையில் கிரிக்கெட் விளையாட வந்த இளைஞர்கள் இந்தச் சிசுவின் சடலம் கடற்கரையில் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இது கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சடலம் தொடர்பில் நீதிவான் விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கொக்கெய்னுடன்...

கட்டாரின் தோஹாவுக்கு வந்து அங்கிருந்து கட்டார் ஏயார்வேஸ் விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப் பொதியில் 3 பிஸ்கட்கள் டின்களில் 4 கிலோ எடையுள்ள 180 கொக்கெய்ன் வில்லைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கென்யப் பிரஜை முதல் தடவையாக இலங்கைக்கு வந்திருந்த நிலையில், மேலதிக விசாரணைகளுக்காகக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### இலங்கையர்...

தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தமிழகம் சென்ற இருவரையும் தமிழகப் பொலிஸார் மீட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்படவுள்ளனர்.

### சஜித்துடன்...

விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அரசு உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து மக்களுக்குச் சாதகமான உடன்பாட்டை மேற்கொண்டு அதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றும் சஜித் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.வேலுகுமார் மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

### சிங்கள...

போலி நல்லிணக்கத்துக்கு கொழும்பு மாவட்ட எம்.பியான நான் ஒருபோதும் இடம் கொடுக்கமாட்டேன்.'

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பு கல்வி வலயத்தில் வட கொழும்பு கோட்டத்தில், கலைமகள் தமிழ் வித்தியாலயத்துடன் அருகாமை சிங்கள மொழி பாடசாலையை இணைக்கும் இரகசிய முயற்சி தொடர்பில் மனோ எம்.பி, கொழும்பு கல்வி வலயப் பணிப்பாளர் தேவபந்துவுக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டு, எழுத்து மூலம் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

“தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் ஒரு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் இந்த முயற்சியை ஒருசில மதத்தலைவர்கள் செய்ய முயல்கிறார்கள். ஒரு கீழ்மட்ட அரசியல்வாதியும் இதில் தொடர்புற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட எம்.பியான எனக்குத் தெரியாமல் செய்யப்படும் இந்த இரகசிய முயற்சி பற்றி கலைமகள் தமிழ் பாடசாலை பெற்றோர்கள் எனக்குப் புகார் செய்துள்ளார்கள்.

ஆகவே என்னிடம் விளையாட வேண்டாம். நான் இதற்கு இடம் கொடுக்க மாட்டேன்.

மாவட்டங்களின் கல்வி நிர்வாக சீர்திருத்தங்களுக்கு எனது நண்பர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் முயற்சிகளுக்கு நான் ஒத்துழைப்பு வழங்குகின்றேன்.

அவை பற்றி நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சு ஆலோசனை குழு, கல்வி மேற்பார்வை குழு, கொழும்பு மாவட்ட மற்றும் பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நாம் பார்த்துக் கொள்கின்றோம்.

அதிகாரமும், மக்கள் ஆணையும் இல்லாத நபர்களின் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடாதீர்.

உண்மையான நல்லிணக்கம் உருவாக, வளர்ச்சியடைந்த கொழும்பு பாடசாலைகளான ரோயல் கல்லூரி, இசிபதன கல்லூரி, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றில் திட்டமிட்டு குறைக்கப்படும் தமிழ் வகுப்புகளைக் கூட்டுங்கள்.

வளர்ச்சியடைந்த ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி, விசாகா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் மொழி பிரிவுகளை ஆரம்பியுங்கள்.

இதன் மூலம் தமிழ் மொழி மூல பிள்ளைகளுக்கு வளர்சியடைந்த நல்ல கல்வி வாய்ப்புகளை வழங்குங்கள்.

இதைச் செய்யாமல், எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புகளையும் பிடுங்க முயலும் இத்தகைய போலி நல்லிணக்கத்துக்கு க் கொழும்பு மாவட்ட எம்.பியான இந்த மனோ கணேசன் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டேன்.” – என்றுள்ளது.

### பொது நினைவு...

ஆனால், அரச தரப்பு எத்தகைய தீவிரங்காட்டினாலும் போரில் உயிரிழந்த அனைவருக்கும் பொதுவான நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதற்குப் பேரினவாதம் உயிரோடிருக்கும் வரை தமிழினம் அனுமதியாது.”

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிச் செயலகம் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைக்க முற்பட்டிருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

“ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்துக்கமைவாக நல்லாட்சி அரசு தான் ஏற்றுக்கொண்ட நிலைமாறுகால நீதிப் பொறிமுறையின் கீழ் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதமாகப் போரில் உயிர்நீத்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கு முடிவெடுத்திருந்தது. போராளிகளையும் பொதுமக்களையும் அவர்களைக் கொன்றொழித்த படைத் தரப்பையும் ஒன்றாக நினைவில் கொள்ளும் இம்முடிவுக்குத் தமிழ் மக்கள் அப்போதே தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்தார்கள்.

இந்த எதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது, அதனை எந்த வடிவத்தில் அமைப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கலந்துரையாடல் பொது அழைப்பும் ஊடகங்களின் பங்கேற்பும் இல்லாது நிபுணர்குழு தெரிவு செய்து அழைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

போர் முடிவுற்று பதின்னான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வ சமிக்ஞையினையும் அரசதரப்பு வெளிக்காட்டவில்லை.

போர் மரபுகளையும் மீறி மாவீரர் துயிலுமில்லங்களைச் சிதைத்தழித்த அரசதரப்பு, யுத்த வெற்றியைப் பறைசாற்றும் விதமாகப் படைத்தரப்பினருக்கான நினைவுச் சின்னங்களைத் தமிழர் தாயகப் பகுதியெங்கும் அமைத்துள்ளது. ஆனால், அகிம்சை வழியில் போராடி உயிர் துறந்த திலீபனின் நினைவு கூருதலை சிங்களக் குண்டர்களின் மூலமும், தனது ஏவல்துறையான பொலிஸ் துறையின் மூலமும் குழப்பி வருகின்றது.

திலீபனின் நினைவேந்தல் நாட்களிலேயே இன நல்லிணக்கத்தின் பெயரால் பொது நினைவுச் சின்னமொன்றை அமைப்பதற்கான கலந்துரையாடலையும் நிகழ்த்துகின்றது. உலகை ஏமாற்றும் அரசின் இந்த நிகழ்ச்சி நிரலுக்குத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஒப்புதல் வழங்கமாட்டார்கள்.” – என்றுள்ளது.

# தொற்றா நோய்கள் தொடர்பாக சமூகத்தில் விழிப்புணர்வு இல்லை

## சாவகச்சேரி மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி சிவசுதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு எம் சமூகத்தில் இல்லை. சமூகமும் தூங்குகின்றது. அதே போன்று தொற்றா நோய்களும் எம்முள் தூங்கி பாரிய விளைவுகளை ஏற்படுத்து கின்றன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி க.சிவசுதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற சுகாதாரம் சார்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

தொற்றா நோய்கள் தொடர்பாக எம் சமூகத்தில் விழிப்புணர்வு இல்லை. ஆரம்ப காலங்களில் எமது வாழ்க்கை முறைமை காரணமாக தொற்றாநோய்கள் கட்டுக்குள் இருந்தன. அன்று காணப்பட்ட உடற்பயிற்சி மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களே தொற்றா நோய்களுக்கு எதிராக எம்மை வழிப்படுத்தின.

தற்போது சமூக மாற்றம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகத் தொற்றா நோய்கள் அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது.



தற்போது நாவுக்கு சுவையையும் வேலை சுகத்தையும் விரும்பும் நிலையால் தான் தொற்றா நோய்கள் எம்மை ஆள்கொண்டு விடுகின்றன.

தற்போது மருத்துவ வசதிகளின் மேம்பாடு காரணமாக ஆயுள்காலம் அதிகரிக்கின்ற போதிலும் பலரும் ஆயுள்காலம் முழுவதும் சுகதேகியாக வாழ்வது கிடையாது. நோயாளியை மரணிக்க விடாது நோயாளியாகவே வைத்திருக்கின்ற ஒரு நிலைதான் காணப்படுகின்றது.

தொற்றா நோய்களை கட்டுப்படுத்த உடற்பயிற்சி,உணவுக் கட்டுப்பாடு மிக அவசியம்.எமக்கு தொற்றாநோய்களில் இருந்து விடுபடுவதற்கான வழிகள் தெரிந்திருந்தும் நாம் அதனை வாழ்வில் கடைப்பிடிப்பதில்லை. எமது குழந்தைகளும் தொற்றாநோய்களை ஏற்படுத்தக்கூடிய உணவுமுறைகளி லேயே அதிக நாட்டம் காட்டுகின்றனர்.

சிறு வயதில் இருந்தே தொற்றாநோய்களில் இருந்து தப்பிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நீரிழிவு, குருதி அமுக்கம் ஆகியவற்றின் பின்னணியில் உலகலாவிய ரீதியாக பாரிய பொருளாதார மற்றும் அரசியல் தலையீடு உள்ளது. தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கான ஒதுக்கீடுகள் மிக குறைவு. ஆனால் தொற்றா நோய்களுக்கான மருந்துகள், வைத்தியசாலைக் கட்டடங்கள் போன்ற வசதி வாய்ப்புக்கள் தாராளமாக ஏற்படுத்தப்படுகின்றன.

நோயில் இருந்து தப்பிப்பதற்கான விழிப்புணர்வு என்பது வெறுமனே ஓர் நடைபயணத்துடன் கடந்து போகின்றது. உலகளாவிய ரீதியாக இந்த நிலைமை உள்ளது.தொற்றா நோய்களின் பின்னணியில் வியாபாரம் உள்ளது. எனவே தொற்றா நோய்களில் இருந்து விடுபட்டால் பொருளாதார ரீதியாகவும் மேம்பட முடியும்.

எனவே எமது குழந்தைகளுக்காவது தொற்றாநோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆரோக்கியமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்.–என்றார்.



# தேசிய மட்டத்துக்குத் தெரிவான சாதனையாளர்கள் கௌரவிப்பு

( நூருல் ஹுதா உமர் )

கல்வி அமைச்சால், அண்மையில் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டியில், மாகாண மட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் காலை ஆராதனையின் போது மாகாண மட்டத்தில், வெற்றி பெற்ற தரம் 9 ஐச் சேர்ந்த சி. ஆர்.மாக் அஹ்மத், மாகாணப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற தரம் 13 ஐச் சேர்ந்த என். பாத்திமா அறூப், சிரேஷ்ட நாடகப் போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த நாடக் குழுவினர்களுக்கான பதக்கங்கள் கல்லூரி முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் ஆசிரியர்களால் வழங்கப்பட்டன.

இதேவேளை, மாகாணப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் இந்தமாதம் இடம் பெறும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

# சாய்ந்தமருதில் குரு பிரதீபா விருது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் 2023 ஆம் ஆண்டுக்கான குரு பிரதீபா புத்தாக்கப் போட்டியில் கல்முனை சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் நால்வருக்கு விருது கிடைத்துள்ளது.

அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், உதவி அதிபர் எம்.ஏ.ஸீ.எல்.நஜீம், ஆசிரியைகளான திருமதி ஜெஸினா, சுலைனா ஆகியோருக்கே இந்த விருது கிடைத்துள்ளது.

இவர்கள் மாகாண கல்வி அமைச்சில் வைத்து மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா வால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட் டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மற்றொரு கபட நாடகம்

போரில் உயிரிழந்தவர்களுக்கான பொது நினைவுச் சின்னம் அமைக்கும் நாடகம் உலகை ஏமாற்றும் வேலை என்பதை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டி இருக்கின்றார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன்.

தமிழர் தேசத்திற்கு எதிராக வரலாற்றில் முன்ன போதும் நிகழ்ந்திராத அளவுக்குக் கொடூரப் பேரழிவுகளை நிகழ்த்திய சிங்களப் பேரினவாதம், அதை மூடி மறைப்பதற்கு நடத்தும் திருகுதாள நாடகங்களில் பிறிதொரு முயற்சிதான் இது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர் தேசத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவான முறையில், நீதி, நியாயமான விசாரணைகளை நடத்தி, உண்மைகளை வெளிக் கொணர்ந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப் படுத்தும் கடப்பாட்டை நிறைவு செய்யாமல், இழுத் தடித்து வரும் சிங்களப் பேரினவாத அரசு, நடந்த உண்மைகளை மூடி மறைப்பதற்கு இப்படிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்ற அடுத்த கட்ட கபட நாடகத்தை ஆரம்பித்தி ருக்கிறது.

யுத்தத்தின் போது தான் இழைத்த கொடூரங்களை மூடி மறைத்தபடி, நல்லிணக்கமும் நிரந்தர சமா தானமும் ஏற்படுத்துவோம் என நாடகமாடும் சிங் களம், அந்த நாடகத்தின் அடுத்த கட்ட அத்தி யாயமாகவே பொது நினைவுச் சின்னம் என்ற அங் கத்தை அரங்கேற்ற முயற்சிக்கின்றது.

ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியபடி பல்லாயிரம் மாவீரர்கள் விதைக்கப்பட்ட துயிலும் இல்லங்களை புல்டோசர்கள் கொண்டு சிதைத்தழித்து, அதன் மீது படை முகாம்கள் அமைத்த காட்டுமிராண்டிப் பட்டாளம் இப்போது பொது சின்னம் குறித்து பேசு வது விந்தையிலும் விந்தை.

இறந்தவர்களின் சமாதியை சிதைத்தழிக்கும் கொடூர மிருகத்தனத்தை கௌதம புத்தரின் சீலத்தின் பெயரால் ஆட்சி செய்யும் சிங்கள பேரினவாதம் புரிந்தமை புத்தனுக்கே மகா இழுக்கு.

அப்படிப்பட்ட கொடூரத்தைப் புரிந்தவர்களுக்கும் அந்த சமாதிகளுடன் காணாமலாக்கப்பட்ட போராளிகளுக்கும் ஒரே பொதுச் சின்னம் என்பது கயவர்களையும் அமரர்களையும் ஒரு தட்டில் வைத்துப் பார்க்க என்னும் சிறுபிள்ளைத்தனமாகும்.

ஐங்கரநேசன் சுட்டிக் காட்டுகின்றமைப் போல அகிம்சை வழியில் போராடி, காந்தி தேசத்திற்கே காந்தீயத்தைப் போதித்ததிலீபனின் நினைவேந்தலையே நடத்த விடாமல் தனது ஏவல் துறையான காவல் துறை மூலமும், சிங்களக்வ்குண்டர்கள் மூலமும் குழப்பி வரும் சிங்களம், பொது நினைவுச் சின்னம் குறித்துப் பேசுவதற்கு அடிப்படை நாகரிகத் தகுதி கூட அற்றது.

உண்மைகளை மூடி மறைத்து, பொய்மைகளால் ஆலாபரணம் நடத்த எத்தனிக்கும் சிங்களத்தின் இந் தத் நிகழ்ச்சி நிரலுக்கு தமிழர்கள் சற்றேனும் ஒப்புதல் தர மாட்டார்கள் என்பது திண்ணம்.

# கேரளா கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணத்தில் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் காரைநகர் – ஊரி பகுதியில் 12 கிலோ 340 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று (24) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை பகுதியை சேர்ந்த 44 வயதுடைய அந்தச் சந்நேகநபர், போதைப் பொருளை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற போது கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# முல்லைத்தீவில் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராய்வு

(அ.அஸ்வர்)

முல்லைத்தீவில் சுற்றுலா மையங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் புதன்கிழமை (20) முல் லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலர் உமாமகேஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேற்படி விடயம் ஆராயப்பட் டுள்ளது.

இயற்கையோடு இணைந்த மிக அழகான பிரதே சமாக முல்லைத்தீவு மாவட்டம் சிறந்து விளங்குகின்றது.

சுற்றுலாத் துறை சார்ந்த விடயங்களில் பின்தங்கி காணப்படுவதால் உல்லாசப் பயணிகளை அதிகம் வரவழைப்பதற்குச் சிறந்த சுற்றுலா மையங்களை தெரிவு செய்து, அவற்றை அபிவிருத்தி செய்ய முடியும் என்று இதன்போது பேசப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி, பிரதேச செயலாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள், உதவி பிரதேச செய லாளர்கள், உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள், கிராம சேவகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மன்னார் ஹரித்தாஸ் நிறுவனத்தின் வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள்

(மன்னார் நிருபர்)

ஹரித்தாஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினர் பாடசாலை மாணவர்கள் மத்தியில் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சித்திரப் போட்டிகளை நடத்தியது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 01 தொடக்கம் 12 வரையிலான மாணவர்களை நான்கு பிரிவுகளாக உட்படுத்தி 'சூழலைப் பாதுகாப்பதில் மாணவர்களின் பங்களிப்பு' எனும் தலைப்பில் சித்திரப் போட்டியை நடத்தியது.

வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் போட்டி இடம்பெற்றது.

மன்னார் சித்திர ஆசிரியர் பெஞ்சமின் பெலிக்ஸ், வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. அன்ரன் அடிகளார், திட்டத்தின் இணைப்பாளர் திரு. யேசுதாசன் ஆகியோர் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து சிறந்த முதல் மூன்று வெற்றியாளர்களைத் தெரிவு செய்தனர்.

வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்வு வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. அன்ரன் அடிகளார் தலைமையில் அதிபர் ஏ.சி.சருபுதீன் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



வெற்றியாளர்கள் விவரம்–

பிரிவு 01 - என். ஆயிஸா அப்ரோஸ், மன், வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, றெ.யுகின்சிக்கா, மன், வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ரா.யனுஸ்கன், மன், வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

பிரிவு 02 – எம்,அல்மா அலா, மன். வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், என்.அஹமட், மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், எஸ். சுகைனா, மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்.

பிரிவு 03- ஆர். றிஸ்பா, மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், பி.டிசான்தன், மன்.கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, எஸ். சுஹா, மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்.

பிரிவு 04 – ஐ.எம்.சஹ்றான், மன். வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஏ.எம்.நபீஸா, மன்.வேப்பங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், த.திசான், மன் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.



# தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உபகரணம், விதைகள் விநியோகம்

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் பயற்றை விதைகள் வழங்கப்பட்டன.

விவசாய அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மாவட்ட செயலாளர் கலாமதி பத்ம ராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனாளர்களுக்கு ஒரு தொகுதி விவ சாய உபகரணங்கள் மற்றும் உயர்ரக பயற்றை உற்பத்திக்கான விதைகள் என்பவற்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சித்திரவேல், மாவட்ட விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் ரி. தனிநாயகம், விவசாய போதனாசிரியர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான தி. தயாபரன், சோ. ஜெயசுதன், க. கிரிதரன் ஆகியோர் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.



# யாழ். இந்து சாதனை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் அண்மையில் தேசிய ரீதியாக இடம் பெற்ற கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்களை பெற்றுள்ளனர்.

எஸ்.விஷால், வீ.ஶ்ரீராம் ஆகிய மாணவர்கள் முதலிடங்களைப் பெற்று தங்கப் பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டனர். இவ்வருடம் நவம்பர் மாதம் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்கும் வாய்பபைப் பெற்றுள்ளனர்.

ஏ.ஸி.பவித்திரன் வெள்ளிப் பதக்கத்தையும், ஏனைய மாணவர்கள் வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.



# வகுப்பறைக் கவின்நிலை போட்டியில் முதலிடம்

**(அஸ்ஹர் ஆதம் )**

சிறந்த வகுப்பறை கவின்நிலை போட்டியில் நிந்தவூர் அல் அதான் வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது.

நிந்தவூர் கல்விக் கோட்டத்துக்கு உ ட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சிறந்த வகுப்பறை கவின்நிலை போட்டியில் நிந்தவூர் கமு அல் – அதான் வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நிந்தவூர் கோட்ட மட்டத்திலான 13 ஆரம்ப கல்விப் பாடசாலைகளுக்கிடையிலான சிறந்த வகுப்பறை கவின்நிலை போட்டியிலேயே இந்தப் பாடசாலையின் தரம் 3சி வகுப்பறை 87 அதி உச்சப் புள்ளிகளைப் பெற்று கோட்ட மட்டத்தில் சிறந்த வகுப்பறையாக தெரிவு செய்யப் பட்டுள்ளது

அதிபர் ஏ.சி.எம்.முபீத்தின் வழிகாட்டலின் கீழ் வகுப் பாசிரியர் திருமதி ஜே.எம்.சலீம்மினின் பங்களிப்புடன் இவ் வகுப்பறை முதலிடம் பெற்றுள்ளது.





# சேவை நலன் பாராட்டு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள அதிபர் திருமதி வசந்தி ஜெயந்திரராசா, பிரதி அதிபர் த.உமாபரமேஸ்வரன் மற்றும் ஆசிரியர் இ.சோமசுந்தரம் ஆகியோரை வாழும்போதே வாழ்த்தும் நோக்கில் நடத்தப்பட்ட சேவைநலன் பாராட்டு விழா வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வில், ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் பாராட்டுப் பத்திரம் மற்றும் அன்பளிப்புக்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது அதிபர் மற்றும் ஆசிரியர்களால் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள அதிபர், பிரதி அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோரின் கடந்தகாலச் செயற்பாடு கள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.



# பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவி தொகை

(ஹஸ்பர் )

திருகோணமலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கல்விக்கான உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பெரெண்டினா நிறுவனம் ஊடாக இந்த உதவி வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

பெரெண்டினாவின் கல்வி ஆதரவு திட்டங்களில் ஒன்றாக, ஆண்டுதோறும் குறைந்த வருமானம் கொண்ட பெரெண்டினா பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு உதவி வழங்கி வருகின்றது.

இந்த உதவித்தொகை கல்வித் தராதர உயர்தர பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அத்தியாவசியமான மாதாந்த செலவுகளை ஈடு செய்ய பெரிதும் பங்களிக்கிறது.

தற்போது, இந்தத் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 550 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 7 மில்லியனுக்கு மேலான தொகையை இந்த நிறுவனம் வழங்குகிறது.

இந்த நிகழ்வு திருகோணமலை பிரதேச வலய முகாமையாளர் இ.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி ஆரம்ப பிரிவு அதிபர் திரு. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் செயற்பாட்டு ஒருங்கமைப்பாளர் டொனால்ட் மற்றும் தம்பலகாமம் கிளை முகாமையாளர் கிருஷாந்தன் மற்றும் திருகோணமலை கிளை முகாமையாளர் பு. கஜரூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# ஆசிரியருக்குக் கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம் )

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட , கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் நிஸ்மி மஜீட் உடற்கல்வித் துறைக்கான கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கந்தளாய் வலயக் கல்விப் பணிப்பாளருமான ஈ.ஜி.பி. தர்மதிலகவால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த முதலாவது சர்வதேச மாஸ்டர் சம்பியன் சிப் விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர், 100 மீற்றர் மற்றும் தடைதாண்டல் போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றுக் கொண்டமைக்காகவே இந்த கௌரவம் வழங்கப் பட்டது .

அத்துடன் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பதக்கம் வென்ற ஒரே வீரர் இவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# முதியோரை மகிழ்விக்கும் ஆன்மீக யாத்திரை நிகழ்வு

(அ.அஸ்வர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிரேஷ்ட பிரஜைகளை மகிழ்விக்கும் நோக்கில் மட்டக்களப்பின் முதியோருக்கு ஆன்மீக யாத்திரை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி அனுசரணை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் வீ. தவராஜாவின் வழிகாட்டலில் அப்பிரதேசத்தில் வசிக்கும் சிரேஷ்ட பிரஜைகளை மகிழ்விக்கும் நோக்கில் இந்த முதியோர் ஆன்மீக யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆண் பெண் இருபாலாருமாக சுமார் 50 சிரேஷ்ட பிரஜைகள் அடங்கிய யாத்திரைக் குழுவைப் பிரதேச செயலக சமுக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சீ. நஜிமுதீன் தலைமையிலான உத்தியோகத்தர் குளாம் வழிநடத்தியது.

கடந்த வியாழக்கிழமை இவர்கள் தமது யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.





# பிரதீபா போட்டிகளில் வென்ற மாணவர்களுக்குக் கௌரவம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கலாசார அலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்ட பிரதீபா - 2023 போட்டிகளில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவில் முதலிடம், இரண்டாமிடம் பெற்ற சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே. எம்.தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கலை, கலாசார போட்டியான கோலாட்டம் சிரேஷ்ட பிரிவில் முதல் இடத்தை எம்.எப்.எம். நிஹ்பத், ஏ. ஜீ.எம்.ஆஸிப், என்.ஹம்தி, என். எம்.இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என். நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம். அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம். எம். றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ. எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எப்.எம்.ஹசீன் மற்றும் ரபான் ஆகியோர் பெற்றனர்.

கோலாட்டப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் இரண்டாமிடத்தை ஜே.எம். ஜரிஹ், எம்.எப்.எம். அஸ்பல், எம்.எப். எம்.பஹுட் , ஏ.ஆர்.எம்.சப்கி, என். அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ.மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம். அபான், எஸ்.எம். ஆதிப், எம். பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம். பர்ஹான், ஆர்.ஏ.எம். அஹ்னாப், ஆகியோர் பெற்றனர்.

சித்திரப் போட்டியில் எம். எல். பாத்திமா ஜியா முதலாம் இடத்தையும் ஜே. றின்சான் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

மாணவர்கள் உட்பட கலாசார மத்திய நிலையத்தில் இந்த மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, எம்.ஐ.எம். அமீர் (ஆசிரியர்), எம்.ஐ. அலாவுதீன் (அண்ணாவி), எம்.எச். பைசர் (அண்ணாவி), ஏ. இஸ்ஸதீன் (அண்ணாவி), ஏ.எல்.எம். சாஜி (ஆசிரியர்), ஐ.எம். சியாம் (ஆசிரியர்), எஸ்.எச்.ஏ. கபூர் (வாத்தியம்) ஆகியோர் நினைவுச் சின்னம் மற்றும் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், சாய்ந்தமருதின் பிரதேச செயலாக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். பர்ஹான், பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீக்கா, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சுரேஷ்குமார், கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நௌசாத், நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம். அஷ்ரப், மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழு செயலாளர் கலைஞர் அஸ்வான் மௌலானா, பாடகர் எம்.சீ.ஏ.மாஹிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# விளையாட்டு உபகரணம் வழங்கல்

**(நூருல் ஹுதா உமர்)**

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம் எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல். முக்தாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக மருதமுனை எவரெடி விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் கலீல் முஸ்தபாவுடன் இடம்பெற்றது.

இதன் போது மருதமுனை எவரெடி விளையாட்டுக்கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் எவரெடி விளையாட்டுக்கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# வறுமை ஒரு தொடர் குறியா...?



வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களின் மதிப்பு பெறுதல் போன்றவை உட்பட்ட வாழ்க்கை தரத்தை தீர்மானிப்பவற்றை இழந்த நிலை ஆகும். இன்று உலகில் பல நாடுகள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக வறுமை காணப்படுகின்றது.

வறுமையை ஒழிப்பதில் ஒவ்வொரு நாடுகளும் பல்வேறு செயற்றிட்டங்கள் ஊடாக முனைப்பு காட்டி வருகின்றன. வறுமை தனிப்பட்டவர்களையோ அல்லது குழுக்களையோ பாதிக்கக் கூடும். இது வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமின்றி வளர்ந்த நாடுகளிலும் வீட்டின்மை, குடிநீர் தட்டுப்பாடு போன்ற பல வகையான சமுதாயப் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைகின்றது.

வறுமையை முழு வறுமை, சார்பு வறுமை என்ற அடிப்படையில் இரண்டு வகைப்படுத்தலாம். முழு வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானமானது அக் குடும்பத்தின் அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக் குறைவாக இருப்பதாகும்.

மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்துக்கும் கீழான நிலையில் உள்ளவர்களை இது குறிக்கும். இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இவ்விரண்டு வகை வறுமையும் காணப்படுகின்றது. வளர்ச்சி பெற்ற நாடான அமெரிக்காவில் சார்பாக மட்டும் காணப்படுகின்றது. இதற்கான காரணம் தேசிய வருமான பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆகும்.

உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையின் படி உலகின் அதிக வறுமை நிலவுகின்ற நாடுகளாக தென்சூடான் 82.30 வீதம், ஈக்குவடோரியல் கினி 76.80 வீதம், மடகஸ்கார் 70.70 வீதம், கினி-பிசு 69.30வீதம், எரித்திரியா 69.00 வீதம், போன்ற நாடுகள் காணப்படுகின்றன.

வறுமை கோடு என்பது ஒரு நாட்டில் போதுமானதாக கருதப்படும் வருமானத்தின் குறைந்தபட்ச அளவு ஆகும். வறுமைக் கோடானது வறுமை வரம்பு என்றும் அழைக்கப்படுகின்றது வறுமை கோடானது சராசரி வயது வந்தோருக்கான ஒரு வருடத்திற்கான தேவைகளின் மொத்த செலவை கணக்கிடுவதன் மூலம் கணக்கிடப்படுகின்றது. வறுமையின் வரையறையை போலவே வறுமைக்கோட்டின் அதிகாரப் பூர்வ புரிதலானது வளரும் நாடுகளைவிட வளர்ந்த நாடுகளில் கணிசமான அளவு அதிகமாக உள்ளது.

வறுமைக் கோடானது 1963 மற்றும் 1964 இற்கு இடையில் மோழி ஓர்வான்ஸ்கி என்பவரால் உருவாக்கப்பட்டது.

பூகோள மயமாக்கல் ஆனது வறுமையிலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. உலகெங்கிலும் உள்ள சமூகங்களுக்கும் தனி நபர்களுக்கும் இடையிலான தொடர்புகளுக்குப் பங்களிப்புச் செய்து அவர்களுக்கிடையிலான பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் நிறுவன ரீதியிலான இணைவுத் தன்மையை மேம்படுத்துதல் பூகோளமயமாக்கும் ஆகும்.

பூகோள மயமாக்கலில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு, பன்னாட்டு நிறுவனங்களின் வெளிநாட்டு முதலீடுகள் பெரும் உந்து சக்தியாக காணப்படுகின்றது. இதன் மூலம் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புகள் ஏற்படுவதுடன் உள்நாட்டு பொருளாதாரம் ஊக்குவிக்கப்படுகின்றது. மக்கள் இலகுவாகவும் விரைவாகவும் மலிவான முறையில் பொருள்கள் சேவைகளை கொள்வனவு செய்யக் கூடிய நிலைமை ஏற்படுகிறது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும்.

கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஏனைய நாடுகளுக்கு பகிரப்படுகின்றது. அறிவியல் கண்டுபிடிப்புகள் பூகோள மயமாக்கள் காரணமாக உலக மாந்தரின் வாழ்வியலில் பல வகையான மேம்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும் கூட சமனற்ற பொருண்மிய பங்கீட்டின் விளைவாக பெருமளவான மக்களின் வாழ்க்கைத் தரம் பொதுவில் குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

செல்வந்தர்கள் மென்மேலும் செல்வந்தர்கள்தான். இந்தப் போக்கு ஒருபுறம் இருக்க எளிய மக்கள் தொடர்ந்து வறுமையை நோக்கி சீரழிவதையும் பார்க்க முடிகின்றது.

அனேகமான பன்னாட்டு நிறுவனங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படுவதால் பொருள்கள் சேவைகளால் பெறப்படும் வருமானம் தலைமை காரியங்களை நோக்கியே அசைகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிடையே பொருளாதார சமூக கலாச்சார விடயங்களில் பாரியளவு ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதுடன் தங்கி இருப்பதையும் தூண்டுகிறது.

இதன் நன்மைகள் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட குழுவினரை சென்றடைவதனால் ஏழைகள் மேலும் ஏழ்மையை நோக்கியும் பணக்காரர்கள் மேலும் செல்வங்களைத் திரட்ட கூடிய நிலைமை ஏற்படுகிறது பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் மற்றும் கலாச்சாரத்தால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள் தமது சந்தைகளை இழக்கின்றனர்.

எனவே பூகோள மயமாக்கலினால் ஒரு நாட்டில் நன்மையானதும் தீமையானதும் தாக்கங்கள் ஏற்படுகின்றன நிகழ்கால உலகில் நாடுகள் தனித்து வாழ்வது ஒரு சவாலான விடயம் ஆகும்.

தனித்து செயல்படுவதனை விட ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் பல்வேறுபட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். உள்ளூர் பொருளாதார அரசியல் மற்றும் கலாச்சார விடயங்களில் அழுத்தங்கள் பிரயோகிக்காத வகையில் நாடுகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கும் பூகோளமயமாக்கல் செயல்பாடுகள் வரவேற்கத்தக்க விடயமாகக் கருதப்படுகின்றது.

பெரும்பாலும் ஒரு நாட்டினுடைய வறுமையை மாற்றத்துக்குக் கொண்டு வருவதில் பூகோளமயமாக்கம் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றது என்றே கூற வேண்டும்.

உலக நாடுகளின் வறுமை நிலைப்பாடுகள் பூகோள மயமாதலால் ஏற்பட்ட வறுமையின் தாக்கங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து இலங்கையின் வறுமையின் நிலைப்பாடு மற்றும் இலங்கை அரசு முன்னெடுத்துள்ள வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்பில் நோக்கும்போது, இலங்கையைப் பொறுத்த வரையில் ஆசிய பிராந்தியத்தின் வளர்ந்துவரும் ஒரு நாடாக விளங்குகின்றது. அவ்வாறிருக்க இலங்கையினுடைய வறுமையின் நிலையானது ஆசிய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் மேம்பட்ட போக்கு நிலை காணப்பட்டாலும் கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாடானது பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இலங்கையின் மத்திய வங்கியின் அறிக்கையின்படி இலங்கையில் ஏறத்தாழ 15.2 வீதமான மக்கள் வறுமை நிலைக்கு உட்பட்டு வாழ்கின்றனர். எமது நாட்டில் வறுமை நிலைக்கு காரணமாக அமையும் காரணிகள் குறித்து நோக்கும்போது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் முக்கிய காரணமாக காணப்படுகின்றது.

யுத்தத்தின் தாக்கமானது இயன்ற ளவிலும் வன்னி கிளிநொச்சி, மன்னார்

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# வறுமை ஒரு தொடர் குறியா...?

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற பகுதிகளில் அடிப்படை வாழ்வாதாரம் அற்ற நிலையில் மக்கள் வாழ்ந்து வரும் போக்கே காணப்படுகின்றது.

மேலும் உறுதியான பொருளாதார வளர்ச்சியின்மை மற்றும் ஸ்திறமற்ற அரசியல் போக்கு போன்றனவும் நாட்டினுடைய வறுமை நிலைக்கு உந்துதலாய் அமைக்கின்றன. அதேபோல் வேலை வாய்ப்பின்மை, மாணவர்களுக்கான சிறந்த கல்வி வசதியின்மை, முறையான சுகாதார வசதியின்மை வருமான குறைவு தன்மை போன்ற பல காரணிகள் இலங்கையின் வறுமை நிலையில் செல்வாக்கு செலுத்துகின்றன.

இலங்கையினுடைய வறுமை நிலை பன்முகத்தன்மையில் காணப்படுவதையும் அறியக் கூடியதாக உள்ளது. எமது நாட்டைப் பொறுத்த வரையில் இனங்களுக்கிடையிலான வறுமை நிலை வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் வறுமையானது சராசரியை விட குறைவாகவும் தமிழ் மக்கள் மத்தியில் சராசரியை விட கூடுதலாகவும் காணப்படுகின்றது. அதே போல் மாகாணங்கள் அடிப்படையிலான வறுமை வேறுபாட்டையும் நாம்

நோக்கக் கூடியதாக உள்ளது. அந்த வகையில் அதிகபட்ச வறுமை சுட்டெண்ணை கொண்ட மாகாணமாக வடமாகாணம் காணப்படுகின்றது.

அதாவது கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் என்ற வரிசை அடிப்படையில் வறுமை நிலையானது காணப்படுவதை அவதானிக்கலாம்.

அதேபோல் குறைந்த வறுமை சுட்டெண் கொண்ட மாகாணமாக மேல் மாகாணம் காணப்படுகின்றது. இங்கு கொழும்பு, கம்பஹா என்ற வரிசை நிலையில் வறுமை நிலை வரிசைப்படுத்தப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து இலங்கையினுடைய வறுமை நிலையை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பில் நோக்கும் போது, நாட்டில் உறுதியான பொருளாதார சூழலை உருவாக்குதல். அதாவது தனியார் துறைகளுக்கு ஊக்கம் கொடுத்து வேலை வாய்ப்பு வழங்குதல். மேலும் கிராமிய விவசாயத்துறையை மாற்றியமைத்தல், நாட்டில் புதிய சந்தைப்படுத்தல் முறைகளை உருவாக்குதல், விவசாய உற்பத்திகளை ஏற்றுமதி உற்பத்திகளாக மாற்றுதல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் வறுமையைக் குறைக்க முடியும்.

அதேபோல் நாட்டில் உட்கட்டுமான வசதிகளை அதிகரித்தல், அமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தல், நவீனமயப்படுத்தல் மற்றும் உற்பத்திகளை அதிகரித்தல், மேலும் உள்நாட்டு மக்களின் சிறு வியாபார முயற்சிகளை ஊக்குவித்தல், முகாமைத்துவ பயிற்சிகளை ஊக்குவித்தல்.

அதேபோல் புதிய சீரமைக்கப்பட்ட வறுமை ஒழிப்பு திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம் வறுமையை இல்லாதொழிக்க முடியும்.

அந்த வகையில் இலங்கை அரசு முன்னெடுத்துள்ள வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்பில் நோக்கும் போது, உலக வங்கி ,ஆசிய வங்கி, சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பின் கீழ் வறுமைத் தணிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் நீண்டகால வறுமை ஒழிப்பு முயற்சி , குறுங்கால வறுமை ஒழிப்பு முயற்சி என்ற இரு முறைகளின் மூலம் வறுமை ஒழிப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உதாரணமாக அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு கல்லோயா திட்டம், மகாவலி திட்டம், உடவளவை திட்டம்.

அதேபோல் நிலமானிய மற்றும் உரமானிய திட்டங்கள் அறிமுகம், சமுர்த்தி நிகழ்ச்சி திட்டங்கள் அறிமுகம், பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் அறிமுகம் போன்ற வறுமை ஒழிப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வகையில் இலங்கையின் வறுமையின் போக்கு எடுத்துக் காட்டக் கூடியதாக உள்ளது. இவ்வாறாக வறுமையானது உலகமயமாதலின் விளைவால் தோற்றம் கண்டாலும் இன்றளவிலும் இல்லாதொழிக்கக் கூடிய பல முன்னெடுப்பு முயற்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் வறுமை ஒரு தொடர் குறியாகவே உள்ளது.

**பெரியசாமி சுசாந்தனி,**
ஊடகற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



# காத்தான்குடியில் சிறுவர் சந்தை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தில் ஆரம்ப பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் “தொடர்பாடல்” எனும் கருப்பொருளில் பாடசாலை வளாகத்தில் சிறுவர் சந்தை ஒழுங்கு செய்திருந்தது.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்திய வலயத்தின் ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி தஸ்லீமா றிஸ்வி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.



# தமிழ் மொழி தினப் போட்டியில் கல்முனை வலயம் முதலிடம்

(நூருல் ஹுதா உமர் )

தமிழ் மொழி தினப் போட்டிகளில் 36 அரங்கப் போட்டிகளில் 14 முதலிடங்களை கல்முனை கல்வி வலயம் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது.

அதில் நிந்தவூர் அஸ்–ஸபா வித்தியாலய எஸ்.எச்.அம்மார் ஆக்கத்திறன் வெளிப்பாடு (பிரிவு 1), மருதமுனை அல்–ஹம்றா மகா வித்தியாலய அப்துல் சமட் ஹயானி பேச்சு (பிரிவு 4), நிந்தவூர் அஸ்–ஸபா வித்தியாலய ஏ.எச்.ஹனீப் முகம்மட் பாவோதல் (பிரிவு 1), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அ.தேஷ்மி பாவோதல் (பிரிவு 3), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி யு.அபர்ண சுவேர்தா பாவோதல் (பிரிவு–4), கல்முனை ஆர்.கே.எம். மகா வித்தியாலயம் சு.வேகாத்மி தனிஇசை (பிரிவு 2).

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி செ.லக்ஸ்விகா குழுஇசை– 1, க.வகஸ்தமி, சி.கேதுஜா, செ.லபோனிகா, பா.போட்சனா, சி.அபிரக்ஸினி, கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி சு.அகஸ்ரி தனிநடனம் (பிரிவு 3), கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி குழு நடனம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி நாட்டிய நாடகம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி வில்லுப்பாட்டு, நிந்தவூர் அல்–அஷ்ரக் முஸ்லிம் மகா வித்தியாலயம், தமிழறிவு வினாவிடை, நிந்தவூர் அல்–அஷ்ரக் முஸ்லிம் மகா வித்தியாலயம் முஸ்லிம் நிகழ்ச்சி, காரைதீவு சண்முகா மகா வித்தியாலயம் நவீன நாட்டுக்கூத்து ஆகியவற்றில் முதலிடத்தை பெற்றுள்ளது.

நாளை 26 ஆம் திகதி திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் மாகாண மட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.





# மாணவர்களுக்கு செய்முறை வகுப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கார்மல் பற்றிமா தேசியக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழகததுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் ஒத்துழைப்புடன் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஈ.ரெஜினோல்ட் ஆலோசனையில் பாடசாலையின் க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு பௌதிகவியல் பாடத்துக்கான செய்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களின் செயல்முறைத் திறனை மேம்படுத்தும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தச் செய்முறை நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு நாடகம்

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பாடசாலைகளில் போதை ஒழிப்பு தொடர்பான வீதியோர நாடகம் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

போதைக்கு எதிரான வீதியோர நாடகத்தை கெல்விடாஸ் நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் இளைஞர் அபிவிருத்தி அகம் இணைந்து நடத்தியது.

குளக்கோட்டன் வித்தியாலயம், சிராஜ் முஸ்லிம் வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை அல்ஹிஜ்ரா மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனை இளைஞர் நாடக குழுவினர் திறம்பட நடித்து போதை ஒழிப்பு தொடர்பான பல விடயங்களை முன்கொண்டு வந்தனர்.

இதில் அகம் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர் வே.மோகன் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலக சமுதாயம் சார் அபிவிருத்தி உத்தியோகத்தர், இளைஞர் சேவை அதிகாரி, சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# நல்ல தலைவர்களை உருவாக்க தவறியது நாட்டின் கல்வி முறை!

## கல்முனை பற்றிமா அதிபர் றெஜினோல்ட்

(வி.ரி. சகாதேவராஜா)

துரதிஷ்டவசமாக நமது நாட்டில் உள்ள கல்வி முறைமை நாட்டுக்கு தேவையான நல்ல தலைமைத்துவங்களை உருவாக்கத் தவறிவிட்டது. அதனை சீர் செய்ய வேண்டியது ஆசிரியருடைய கடமையாகும் .

இவ்வாறு கல்முனையில் இடம் பெற்ற பயிற்சி பட்டறை ஒன்றில் உரையாற்றிய கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தெரிவித்தார் .

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து அக்சன் யூனிட்டி லங்கா அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை சம்மாந்துறை அக்கரைப்பற்று திருக்கோயில் ஆகிய கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது ஆரம்ப நெறி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கற்பித்தல் அணுகுமுறை செயலமர்வை நடத்தியது.

ஏயூ லங்கா நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர் கே.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, பிரதி அதிபர் பா. சந்திரேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

எயூ லங்கா நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் கே.சதீஸ்குமார், திட்ட முகாமையாளர் வி.சுதர்சன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.





அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

ஆசிரியர்கள் தங்களது அறிவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக கற்கின்ற ஆசிரியரே சிறந்த ஆசிரியர் .

ஒரு ஆசிரியனுக்கு கிடைக்க கூடிய பெரிய அதிசயம் என்னவென்றால் அவன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் உள்ளத்தை தொட வேண்டும் .அதுவே அவனது மிகப்பெரிய அதிசயமாகும். மேலும் பாடசாலைகளிலே தலைமைத்துவம் உருவாக வேண்டும்.– என்றார்.

# மட்டக்களப்பில் ஓவியத் திருவிழா!



(பழுவூரான்)

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல் கள் திணைக்களமும், கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகமும் இணைந்து ஏற்பாடு செய்த கிழக்கின் மாபெரும் ஓவியத் திருவிழா மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வியாழக்கிழமை (21) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி பாரதி கென்னடி புளோரன்ஸ், மற்றும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியைப் பார்வையிட கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் வருகை தந்திருந்தனர் .

# சர்வதேச நாணய நிதியத்தினர் - எதிரணி சந்திப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறுதிக் கலந்துரையாடலின் நிமிர்த்தம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று சந்தித்துக் கலந்துரையாடினர். நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம்,பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.வேலுகுமார் மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

# 19 காலிஸ்தான் தீவிரவாதிகளின் சொத்துகளை முடக்க தீர்மானம்!

## - தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் இந்தியா நடவடிக்கை



வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு எதிராக செயல்படும், காலிஸ்தான் தீவிரவாதிகள் 19 பேரின் சொத்துகளை தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கனடாவில் இருந்து செயல்படும் காலிஸ்தான் தீவிரவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜுன் 18 ஆம் திகதி மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலை சம்பவத்துக்கு, இந்தியா மீது கனடா குற்றம் சுமத்தியதால் இரு நாடுகள் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஹர்தீப் சிங் நிஜ்ஜாருக்கு சொந்தமான பஞ்சாப் ஜலந்தர் மாவட்டத்தில் உள்ள சொத்துகள், சீக்ஸ் ஃபார் ஜஸ்ட்டிஸ் அமைப்பின் தலைவர் குருபத்வந்த் சிங்குக்கு சொந்தமான சண்டிகர் வீடு ஆகியவற்றை என்.ஐ.ஏ நேற்று முன்தினம் முடக்கியது.

இந்த நிலையில், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு எதிராக செயல்படும் காலிஸ்தான் தீவிர வாதிகள் 19 பேரின் சொத்துகளை தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பிரித்தானியாவில் உள்ள பரம்ஜித் சிங், குல்வந்த் சிங், சுக்பால் சிங், சரப்ஜித் சிங், குர்மீத் சிங், குருப்ரீத் சிங், துபிந்தர் ஜீத் பாகிஸ்தானில் உள்ள வத்வா சிங், அமெரிக்காவில் உள்ள ஜே தாலிவால், ஹர்பிரீத் சிங், ஹர்ஜப் சிங், அமர்தீப் சிங், ஹிம்மத் சிங் பாகிஸ்தானில் உள்ள வத்வா சிங் பாபர். ரஞ்சித் சிங், டுபாயில் உள்ள ஜஸ்மீத் சிங், ஆஸ்ரேலியாவில் உள்ள குர்ஜந்த் சிங் கனடாவில் உள்ள லக்பிர் சிங், ஜதிந்தர் சிங் ஆகியோர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என இந்தியா தெரிவிக்கின்றது. இந்த நிலையில், இவர்களுக்கு சொந்தமாக இந்தியாவில் உள்ள சொத்துகளை தீவிரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் முடக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

## சீமான் மீது அவதூறு:

# நடிகை விஜயலட்சுமி மீது நாம் தமிழர் கட்சி புகார்!



சீமான் மீது அவதூறு பரப்பி வருகிறார் என நடிகை விஜயலட்சுமி மீது நாம் தமிழர் கட்சி சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

நடிகை விஜயலட்சுமி நாம் தமிழர் கட்சி தலைமைஒருங்கிணைப்பாளர் சீமான் மீது கடந்த மாதம் 28 ஆம் திகதி சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

அதில், சீமான்ம துரை மீனாட்சி அம்மன் கோயிலில் மாலை மாற்றி என்னை திருமணம்செய்து கொண்டார். நாங்கள் கணவன், மனைவியாக வாழ்ந்தோம்.

இந்த நிலையில், அவர் எனக்கு தெரியாமல் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். என்னிடம் பணம் பெற்றும் மோசடி செய்தார் என்று குறிப்பிட்டிருந்தார்

இதுகுறித்து வளசரவாக்கம் பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், விஜயலட்சுமி, திடீரென தனது புகாரை திரும்ப பெற்றுக் கொண்டு பெங்களூர் சென்றுவிட்டார்.

இந்த நிலையில், அண்மையில் காணொளி ஒன்றை வெளியிட்ட விஜயலட்சுமி, என்னை பற்றி சீமான் அவதூறு பரப்பி வருகிறார். இதனால், நான் தற்கொலை செய்து கொள்ளப்போகிறேன். என் சாவுக்கு சீமான்தான் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் செந்தில் குமார் வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் நடிகை விஜயலட்சுமி மீது புகார் ஒன்றை அளித்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில், நடிகை விஜயலட்சுமி மீண்டும் பணம் பறிக்கும் நோக்கில் சீமான் மீது அவதூறு பரப்பு வதுடன், தனது தற்கொலை முயற்சிக்கு சீமான் தான் காரணம் என காணொளி வெளியிட்டுள்ளார்.

எனவே, சீமான் மீது தொடர்ந்து அவதூறு பரப்பிவரும் விஜயலட்சுமி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# கர்நாடகாவில் முழு அடைப்பு போராட்டம்!

கர்நாடக மாநிலத்தில் நாளை நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு மத்திய அரசு தடை விதிக்கும் வகையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு காவிரி விவசாயிகள் சங்கப் பொதுச் செயலர் பி.ஆர்.பாண்டியன் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்கக் கூடாது என வலியுறுத்தி கர்நாடக மாநிலத்தில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

நாளை கர்நாடகா மாநிலம் முழுமையிலும் முழு அடைப் புப் போராட்டம் நடத்த விவசாயிகள் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன. இதன் பின்புலமாக அந்த மாநில அரசு செயல்படுவதாக வெளிவந்திருக்கும் செய்தி, பெரிதும் அதிர்ச்சி அளிக்கிறது. இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் மௌனம் காப்பது, விவசாயிகளுக்கு செய்யும் துரோகம் மட்டுமின்றி, கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கும் செய்யும் துரோகமாகும் என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியா உடனான உறவு கனடாவுக்கு முக்கியமானது!

## - பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் கருத்து



இந்தியா உடனான உறவு கனடாவுக்கு மிகவும் முக்கியம் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளார்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடாவில் கொல்லப்பட்டதில் இந்திய முகவர்களுக்குத் தொடர்பு இருக்கிறது என நம்பத்தகுந்த தகவல் கிடைத்திருக்கிறது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சில நாட்களுக்கு முன் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து இரு நாட்டு அரசுகளுக்கும் இடையேயான மோதல் அதிகரித்தது. இதன் காரணமாக முன் எப்போதும் இல்லாத அளவு இருதரப்பு உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் உறவு கனடாவுக்கு முக்கியம் என்று அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா உடனான உறவு கனடாவுக்கு மிகவும் முக்கியம். தற்போதுள்ள சூழலை நாங்கள் புரிந்து கொள்கிறோம். இந்தியா உடனான உறவை கனடா மிகவும் மதிக்கிறது. இது ஒரு சவாலான விஷயம். எங்கள் சட்டத்தை, குடிமக்களை பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அதே நேரத்தில் ஒரு முழுமையான விசாரணையை நடத்தி உண்மையைக் கண்டறிவதற்கும் எங்களுக்கு பொறுப்பு உள்ளது.

இந்தியா மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபிக்கப்பட்டால் கனடா அரசின் நிலை என்னவாக இருக்கும் எனக் கேட்கிறீர்கள்.

கனடாவின் மண் ணில் கனடாவின் குடிமகன் ஒருவரைக் கொல்வது என்பது கனடாவின் இறை யாண்மையை மீறும் செயல் என்பதால் அது கவலை தரக்கூடியதாகவே இருக்கும். இந்தோ-பசிபிக் வியூகம் கனடாவுக்கு மிக மிக முக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

# மக்கள் செல்வாக்கை இழக்கின்றார் ட்ரூடோ



கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நாட்டு மக்களிடையே ஆதரவு குறைந்து வருகிறது என சமீபத்திய கருத்து கணிப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆய்வு நிறுவனமான 'இப்சோஸ்' கனடா மக்களிடையே நடத்திய கருத்து கணிப்பிலேயே இது தெரியவந்துள்ளது.

இந்த கருத்துக் கணிப்பில் பங்கேற்ற 40 சதவீத மக்கள் கனடா எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கனடாவில் தேர்தல் 2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. இந்த நிலையில், 30 சதவீத மக்களே ஜஸ்டின் ட்ரூடோவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதேவேளை, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எதிராக .இந்தியாவின் புதுடில்லியில் போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

புதுடில்லி ஜந்தர் மந்தரில், ஐக்கிய ஹிந்து முன்னணி அமைப்பினரால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, காலிஸ்தான் அமைப்புக்கு ஆதரவாக செயல்படும் கனடா பிரதமரின் செயற்பாட்டைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளது.

அத்துடன், கோரிக்கைகள் அடங்கிய மனுவை போராட்டக்காரர்கள் கனடா தூதரகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல்!

அமெரிக்காவிற்கு அச்சுறுத்துலாக சீனா மாறி உள்ளது எனவும் அந்த நாடு போருக்கு தயாராகி வருகிறது என்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலே கூறியுள்ளார்.

குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் உள்ள நிக்கி ஹாலே இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த அரை நூற்றாண்டாக அமெரிக்காவை தோற்கடிக்க, சீனா சதி செய்து வருகிறது. அந்த நாட்டை எதிர்கொள்ள வலிமையும் பெருமையும் முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நமது வர்த்தக இரகசியங்களை சீனா எடுத்து கொண்டுள்ளது. மிகவும் பின் தங்கிய நாடாக இருந்த சீனா தற்போது, உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக சீனா மாறி உள்ளது.

அமெரிக்காவை அச்சுறுத்தவும், ஆசியாவை தாண்டி ஆதிக்கம் செலுத்தும் வகையில் இராணுவத்தை சீனா கட்டமைத்து வருகின்றது என்றும் நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

## ஆசிய விளையாட்டுப் போட்டியில்

# இலங்கைக்கு முதல் பதக்கம் கிரிக்கெட்டால் கிடைத்தது

## தங்கத்தைத் தட்டிப் பறித்தது இந்தியா



ஆசிய விளையாட்டுப்போட்டிகளின் பெண்கள் இருபது-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இலங்கை அணி, இந்தியாவிடம் தோல்விடைந்து, தங்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தது. இதனடிப்படையில் இலங்கை வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றது.

இலங்கை நேரப்படி இன்று காலை 11.30 மணியளவில் சீனாவின் ஹாங்சோ நகரில் இப்போட்டி ஆரம்பித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, மந்தனா (46), ஜெமிமா (42) ஆகியோரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலங்கை சார்பாக பந்துவீச்சில் உதேஷிகா பிரபோதனி, சுகந்திக குமாரி, இனோகா ரனவீர ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் 117 என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணிக்கு, சாமரி (12), ஹாஷினி (25), நிலக்ஷி (23), ஒஷாடி (19) ஆகியோர் ஓரளவு கைகொடுத்தபோதும் இலங்கை அணியால் வெற்றியிலக்கை எட்ட முடியவில்லை.

20 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 97 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன்மூலம் இலங்கை அணி 19 ஓட்டங்களால் இந்தியாவிடம் தோல்வியடைந்து, தங்கம் வெல்லும் வாய்ப்பை இழந்து வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள இலங்கைக்கு கிரிக்கெட்டின் மூலமே ஒரு பதக்கம் கிடைத்துள்ளது என்பது குறிப்பித்தக்கது.

